**PRIMARY SCHOOL**

**SECOND SEMESTRAL ASSESSMENT - 2013**

**TAMIL LANGUAGE - PAPER 2**

**PRIMARY 4**

Name: ______________________________ (        )    Marks: [ / 45 ]

Class: Primary 4 – (        )

Date: 30 October

Setter:

Parent's Signature: ____________

INSTRUCTIONS TO CANDIDATES

Do not open this booklet until you are told to do so.

Follow all instructions carefully.

Answer all the questions.

This booklet consists of 10 printed pages


PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 4 - 2013

PAPER 1 – COMPOSITION

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| இரவு நேரத்தில் | ரொட்டி |
| அதிகப் பசி | பிளாஸ்டிக் பையை |
| குளிர்பதனப் பெட்டி | சுவைத்துச் சாப்பிட்டு |
| உணவு வகைகள் | ஓட்டை வழியாக |

1 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1,2,3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

வேற்றுமை உருபு ( 5 ம. )

கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

பாலன் நான்காம் வகுப்பில் படிக்கிறான். அவன் ஒரு நாள் பள்ளி முடிந்து, ____(1)____ சென்று கொண்டிருந்தான். வழியில் யாரோ ____(2)____ அடையாள அட்டை கீழே கிடந்தது. பாலன் அதனை எடுத்து தன் ____(3)____ வைத்துக்கொண்டான். பின்னர், அந்த அட்டையில் காணப்பட்ட ____(4)____ பார்த்தான். அந்த அடையாள அட்டையை ____(5)____ நேரே சென்று ஒப்படைக்க எண்ணினான். ஆனால் அந்த வீட்டுக்குச் செல்லும் வழி அவனுக்குத் தெரியவில்லை. அதனால் அவன் தன் வீட்டுக்கு முதலில் சென்றான்.

1. ( 1 ) வீட்டில்
   ( 2 ) வீட்டுக்கு
   ( 3 ) வீட்டை
   ( 4 ) வீட்டின்

2. ( 1 ) ஒருவரின்
   ( 2 ) ஒருவருக்கு
   ( 3 ) ஒருவரை
   ( 4 ) ஒருவருடன்

3. ( 1 ) பைக்கு
   ( 2 ) பையின்
   ( 3 ) பையிலிருந்து
   ( 4 ) பையில்

4. ( 1 ) முகவரிக்கு
   ( 2 ) முகவரியை
   ( 3 ) முகவரியின்
   ( 4 ) முகவரியால்

5. ( 1 ) உரியவருக்கு
   ( 2 ) உரியவருடைய
   ( 3 ) உரியவரிடம்
   ( 4 ) உரியவரது

தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி

ஓர் ஊரில் கெட்டிக்கார சிறுமி ஒருத்தி இருந்தாள். அன்று அந்தச் சிறுமியின் பிறந்தநாள். அதனால், அவளுடைய தந்தை அவளுக்கு ஒரு தங்கச்சங்கிலியையும் வளையல்களையும் பரிசாகத் தந்தார். சிறுமி நகைகளை அணிந்து கொண்டு பக்கத்துத் தெருவில் வசிக்கும் தன் தோழியின் வீட்டுக்கு நகைகளைக் காட்டப் புறப்பட்டாள்.

அவள் ஒரு தோட்டத்தின் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் அங்கு யாரும் இல்லை. அப்போது திடீரென்று ஒரு திருடன் கத்தியோடு அவளை நோக்கி வருவதைப் பார்த்தாள். அவளுக்குப் பயம் ஏற்பட்டது. பக்கத்தில் ஒரு கிணறு இருந்தது. அப்போது சிறுமிக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே, அவள் 'ஓ' என்று சத்தமாக அழுவது போல நடிக்கத் தொடங்கினாள். அருகில் வந்த திருடன், "ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என்று கேட்டான். அதற்குச் சிறுமி, "நான் ஒரு வைரச்சங்கிலியை அணிந்து இருந்தேன். இந்தக் கிணற்றில் எட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தபோது அந்த வைரச்சங்கிலி உள்ளே விழுந்துவிட்டது," என்று கூறினாள்.

வைரச்சங்கிலி என்றதும் திருடனுக்கு ஆனந்தம். "கிணற்றில் மூழ்கி அந்த வைரச்சங்கிலியை எடுத்துக்கொள்ளலாம். அதை விற்றால் நல்ல பணம் கிடைக்கும்," என்று ஆசையோடு கிணற்றின் உள்ளே இறங்கினான்.

இது தான் நல்ல சமயம் என்று எண்ணிய சிறுமி உடனே மின்னல் வேகத்தில் ஓடி வீட்டை அடைந்தாள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. பிறகு, அதன் எண்ணை அடைப்பினுள் எழுது (5 ம.செ)

6. பிறந்தநாள் பரிசாகச் சிறுமிக்கு என்ன கிடைத்தன ?

(1) அவளுக்குத் தங்கச் சங்கிலியும் வைர வளையல்களும் கிடைத்தன
(2) அவளுக்குத் தங்கச் சங்கிலியும் வைர சங்கிலியும் கிடைத்தன
(3) அவளுக்குத் தங்கச் சங்கிலியும் வளையல்களும் கிடைத்தன
(4) அவளுக்குத் தங்கச் சங்கிலியும் வளையலும் கிடைத்தன ( )

7. சிறுமி அடுத்த தெருவுக்கு எதற்குச் சென்றாள் ?

(1) தன் தோழியைச் சந்திக்கச் சென்றாள்
(2) பிறந்தநாளுக்குத் தன் தோழியை அழைக்கச் சென்றாள்
(3) தன் தோழியுடன் விளையாடச் சென்றாள்
(4) தன் தோழியிடம் நகைகளைக் காட்டச் சென்றாள்

( )

8. சிறுமிக்கு ஏன் பயம் ஏற்பட்டது ?

(1) அவள் தனியாக நடந்து சென்றதால்
(2) தோட்டத்தில் யாரும் இல்லாததால்
(3) திருடன் ஒருவன் கத்தியோடு அவளை நோக்கி வந்ததால்
(4) அவள் பக்கத்தில் ஒரு கிணறு இருந்ததால் ( )

9. சிறுமி ஏன் சத்தமாக அழுவது போல் நடித்தாள் ?

(1) திருடனை அங்கு இருந்து ஓடச் செய்ய
(2) திருடனை ஏமாற்ற
(3) திருடனைக் கிணற்றில் இறங்கி வைரச்சங்கிலியை எடுக்க
(4) திருடனைப் பயமுறுத்த ( )

10. எப்போது சிறுமி அந்த இடத்தை விட்டு ஓடினாள் ?

(1) திருடனுக்கு ஆனந்தம் ஏற்பட்டபோது
(2) திருடன் வைரச்சங்கிலியை எடுத்தபோது
(3) திருடன் கிணற்றின் உள்ளே இறங்கியபோது
(4) திருடன் வைரச்சங்கிலியைப் பற்றி நினைத்தபோது ( )

5. சொற்பொருள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பிறகு, அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (10 மதி)

11. புறப்பட்டாள்

(1) நடந்தாள்
(2) கிளம்பினாள்
(3) போனாள்
(4) சென்றாள் ( )

12. பயம்

(1) ஆச்சரியம்
(2) அதிர்ச்சி
(3) அச்சம்
(4) வியப்பு ( )

13. கேட்டான்

(1) வினவினான்
(2) ஏசினான்
(3) முறைத்தான்
(4) சொன்னான் ( )

14. அணிந்து

(1) போட்டு
(2) வைத்து
(3) மாட்டி
(4) காண்பித்து ( )

15. ஆனந்தம்


(1) புன்னகை
(2) மகிழ்ச்சி
(3) வருத்தம்
(4) சிரிப்பு ( )

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் ( 5 ம )

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :



# கல்யாணி மாளிகை



உங்களை அன்புடன் வருக வருக என்று

வரவேற்கிறது

பல விதமான வண்ணங்களிலும் கண்ணைக்

கவரும் டிசைன்களிலும் புதிதாக

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட

பட்டு புடவைகள் உங்களை மயங்க வைக்கும்!

தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாட இன்றே வாருங்கள்

சிறப்பு விலையில்!!
குழந்தைகளுக்கான பஞ்சாபி
ஆடைகள், குர்தா வகைகள்
கிடைக்கும்

பருத்தி சேலைகள்
வாங்குபவர்களுக்கு
இலவசமாக ரவிக்கை
தைத்துத் தரப்படும்

தீபாவளி சிறப்பு விற்பனைக்கு வரும் முதல் 25
வாடிக்கையாளர்களுக்கு ஒரு சுவர் கடிகாரம் இலவசம்

இன்றே வாருங்கள்

11, சிராங்கூன் சாலை, சிங்கப்பூர்

கேள்விகளுக்கு ஏற்ற சரியான விடையைக் கொடுக்கப்பட்டிருக்கும் தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

16. எவை புதிதாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளன?
   (1) பஞ்சாபி ஆடைகள்
   (2) பட்டு புடவைகள்
   (3) பருத்தி சேலைகள்
   (4) குர்தா ஆடைகள்

17. யாருக்கு இலவசமாக ரவிக்கை தைத்துத் தரப்படும்?
   (1) பட்டு புடவை வாங்குபவர்களுக்கு
   (2) பஞ்சாபி ஆடைகள் வாங்குபவர்களுக்கு
   (3) பருத்தி சேலைகள் வாங்குபவர்களுக்கு
   (4) குர்தா ஆடைகள் வாங்குபவர்களுக்கு

18. சிறப்பு விலையில் என்ன வாங்கலாம்?
   (1) பருத்தி சேலைகள்
   (2) சுவர் கடிகாரம்
   (3) பட்டு புடவைகள்
   (4) பஞ்சாபி ஆடைகள்

19. சிறப்பு விற்பனை எதற்காக நடத்தப்படுகிறது?
   (1) பிறந்த நாளுக்காக
   (2) தீபாவளிக்காக
   (3) கடை திறப்பிற்காக
   (4) புதிய ஆடைகளின் வருகைக்காக

20. எப்போது சுவர் கடிகாரம் இலவசமாகக் கிடைக்கும்?
   (1) கடைக்கு அடிக்கடி வரும் வாடிக்கையாளராக இருந்தால்
   (2) கடையில் நிறைய புடவைகள் வாங்கும் வாடிக்கையாளராக இருந்தால்
   (3) கடைக்கு வரும் முதல் 25 வாடிக்கையாளர்களில் ஒருவராக இருந்தால்
   (4) கடையில் குழந்தைகளுக்காக பல ஆடைகள் வாங்கும் வாடிக்கையாளராக இருந்தால்

21 முதல் 37 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது:

செய்யுள் (5 ம)

செய்யுளை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து கோடிட்ட இடத்தில் எழுது:

21. எறும்பு ஊரக் ____________________ தேயும்

22. ____________________ உண்டு வாழ்வு

23. ஆத்திரக்காரனுக்கு ____________________ மட்டு.

24. செய்வன ____________________ செய்

25. ____________________ அழகு வரும்பொருள் உரைத்தல்

| | |
|---|---|
| உண்டிக்கு | திருந்தச் |
| புத்தி | அறிவு |
| திரும்பச் | கல்லும் |
| ஒன்றுபட்டால் | மந்திரிக்கு |

ஒலி வேறுபாட்டுச் சொற்கள் ( 5 ம )

கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

26. தரையில் ______________ ஓடுவதைக் கண்டு மீரா பயந்தாள்.

(1) பள்ளி (2) பல்லி

27. சென்ற வாரம் கனத்த ___________ பெய்து வெள்ளம் பெருகியது.

(1) மலை (2) மழை

28. நான் தினமும் பப்பாளிப் ______________ சாப்பிடுவேன்.

(1) பலம் (2) பழம்

29. நாங்கள் கடற்______________ மணல் வீடு கட்டினோம்.

(1) கரையில் (2) கறையில்

30. ____________________ பல வண்ணங்களிலும் இருக்கும்.

(1) கிளி (2) கிழி

முன்னுணர்வுக் கருத்தறிதல் ( 5 ம )

கீழ்காணும் பகுதியைப் படித்து, கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் தேர்ந்தெடுத்து கோட்டில் எழுது.

தோட்டத்தில் ஒரு கம்பளிப்பூச்சி ஓர் இலையைத் தின்றுகொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து, அது அடுத்த இலைக்கு 31.________________ ஊர்ந்து சென்றது. அப்போது ஓர் அணில் அங்கு வந்தது. அது கம்பளிப்பூச்சியைப் பார்த்து, " பூச்சியே! நிறையச் சாப்பிடாதே! நீ பருத்துவிட்டால் உன்னால் 32.________________ முடியாது!" என்று சொல்லிச் சிரித்தது. கம்பளிப்பூச்சி பேசாமல் இருந்தது. இப்படியே அணில் சில நாள்கள் கம்பளிப்பூச்சியை 33.________________ செய்து வந்தது. ஆனால், கம்பளிப்பூச்சி மௌனமாகவே இருந்தது.

நாள்கள் பல 34.________________. கம்பளிப்பூச்சி ஓர் அழகிய வண்ணத்துப்பூச்சியாக மாறியது. அது ஆனந்தமாகத் தோட்டத்தை 35.________________ பறந்தது. அதைப் பார்த்த அணில் ஆச்சரியப்பட்டது.

| | |
|---|---|
| செல்ல | மெதுவாக |
| சுற்றி | கழித்தது |
| கேலி | திரிந்து |
| நகர | வம்பு |
| சென்றன | ஆசையாக |

(7) சுயவிடைக் கருத்தறிதல் (10 ம.எ)

பின்வரும் பகுதியைக் கவனமாக படி. பின் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை எழுது.

அன்பன் நான்காம் வகுப்பில் படித்து வந்தான். அவன் வீடு ஈசூன் வீடமைப்புப் பேட்டையில் இருந்தது. அப்பேட்டையில் ஒரு நீச்சல் குளம் இருக்கிறது. அதில் இளையர்கள் நீந்துவதை அன்பன் ஒவ்வொரு நாளும் பார்ப்பான். அப்போது அவனுக்குத் தண்ணீரில் இறங்குவதற்கு ஒரே பயம். அதனால் அவன் நீந்தக் கற்றுக்கொள்ளவில்லை.

ஒரு நாள் மழை விடாது பெய்துகொண்டிருந்தது. அதனால் அவன் வீட்டின் அருகில் ஓடும் கால்வாயில் தண்ணீர் நிறைந்து ஓடியது. சிறுவர்கள் சிலர் கால்வாயின் அருகில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது சிறுவன் ஒருவன் கால் தவறி கால்வாயில் விழுந்துவிட்டான். அங்கு நின்ற மற்றச் சிறுவர்கள் உதவிக்குக் கத்தினார்கள். இதனைக் கேட்டுச் சிலர் ஓடி வந்தனர். ஆனால் அவர்களுள் நீந்தத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை.

அன்பனும் கால்வாயை நோக்கி ஓடினான். ஆனால் அவனுக்கும் நீந்தத் தெரியாது. சிறிது நேரத்தில் அங்கு வந்த காவலர்கள் நீரில் விழுந்த சிறுவனை வெளியில் தூக்கி வந்தனர். ஆனால், அச்சிறுவன் இறந்துவிட்டான். இதைப் பார்த்த அன்பனுக்கு அழுகை வந்தது. தனக்கு மட்டும் நீந்தத் தெரிந்திருந்தால் அந்தச் சிறுவனைக் காப்பாற்றி இருக்கலாமே என நினைத்து மனம் வருந்தினான். தானும் நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும் என முடிவு செய்தான்.

*வினாக்கள்*

36. நீச்சல் குளம் எங்கு இருக்கிறது?

37. அன்பன் ஏன் நீந்தக் கற்றுக்கொள்ளவில்லை?

38. சிறுவன் எப்படிக் கால்வாயில் விழுந்தான்?

39. ஏன் யாரும் சிறுவனுக்கு உதவவில்லை?

40. அன்பன் ஏன் நீந்தக் கற்றுக்கொள்ள முடிவெடுத்தான்?

******* விடைகளைச் சரி பார்! *******

P4

விடைகள் TESTPAPER 3

1. (2) 2. (1) 3. (4) 4. (2) 5. (3)

6. (3) 7. (4) 8. (3) 9. (2) 10. (3)

11. (2) 12. (3) 13. (1) 14. (1) 15. (2)

16. (2) 17. (3) 18. (4) 19. (2) 20. (3)

21. கல்லும் 22. ஒன்றுபட்டால் 23. புத்தி 24. திருந்தச் 25. மந்திரிக்கு

26. (2) 27. (2) 28. (2) 29. (1) 30. (1)

31. மெதுவாக 32. நகர 33. கேலி 34. சென்றன 35. சுற்றி

36. நீச்சல் குளம் ஈசூன் வீடமைப்புப் பேட்டையில் இருக்கிறது .

37. அன்பனுக்குத் தண்ணீரில் இறங்குவதற்கு ஒரே பயம் என்பதால் அவன் நீந்தக் கற்றுக் கொள்ளவில்லை .

38. சிறுவன் கால் தவறி கால்வாயில் விழுந்தான்.

39. யாருக்கும் நீந்தத் தெரியாது என்பதால் யாரும் சிறுவனுக்கு உதவவில்லை .

40. தனக்கு மட்டும் நீந்தத் தெரிந்திருந்ததால் சிறுவனைக் காப்பாற்றி இருக்கலாம் என்று அன்பன் நினைத்தான் . அதனால் அன்பன் நீந்தக் கற்றுக் கொள்ள முடிவெடுத்தான்.